


தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவனை ஆதரித்து தென்காசி வேன் ஸ்டாண்டில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,நகர செயலாளர் சாதிர், அப்துல்லா,தொகுதி பார்வையாளர் மதியழகன்,தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி உள்பட கழக நிர்வாகிகள்,மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ம.தி.மு.க. வேட்பாளர் தி.மு.ராஜேந்திரனை ஆதரித்து கடையநல்லூர் மணிக்கூண்டு அருகே கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் செல்லத்துரை, அப்துல்லா,தொகுதி பார்வையாளர்கள் மாலைராஜா,குணசேகரன்,மரு.ராணி ஸ்ரீ குமாரி எம்.பி.நகர செயலாளர்கள் அப்பாஸ் பிரப்பா உள்பட கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உடன்குடியில் வீதி வீதியாக சென்று வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், உடன்குடி ஒன்றிய செயலாளர் டி. பி. பாலசிங், பேரூர் கழகச் செயலாளர் மால்ராஜேஷ், கூட்டணி கட்சி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி செல்லூர் பகுதியில் வீடு வீடாக சென்று பொது மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார் உடன் கழக நிர்வாகிகள் ஏ.கே.ஆறுமுகம், ரவீந்திரன், பி.டி. மணிமாறன், முத்து கணேசன், வைகை பரமன், குரும்பன், அறிவுநதி, ராதாகிருஷ்ணன், சரவணன் அம்பலம், பொன் சேது ராமலிங்கம், காவேரி சொக்கலிங்கம், செல்லூர் கருப்பு ராஜ், நல்ல காமன், திராவிடமாரி, துபாய் நாகராஜ், ராஜேஷ் என்ற பாக்யராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் மார்க்கையன்கோட்டை பேரூர் செயலாளர் அ.முருகன் ஏற்பாட்டில் தமிழ் மாநில காங்கிரஸ் ஒன்றிய தலைவர் ராஜா மார்க்கையன்கோட்டை பேரூர் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் தினகரன் அதிமுக பேரூராட்சி முன்னாள் சேர்மன் அகிலன் ஆகியோர் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. முன்னாள் முதல்வர் கழக வேட்பாளர் ஓ பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மண்டபம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள சாத்தான்குளம், வாலாந்தரவை, குயவன்குடி, போன்ற கிராமங்களில் பொது மக்களிடம் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார் இந்நிகழ்ச்சியினை ஒன்றிய கழக செயலாளர் கே ஜே பிரவீன் ஏற்பாடு செய்திருந்தார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிகழக வேட்பாளர் ஆ.மகாராஜன் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட புலிமான்கோம்பை, தர்மத்துப்பட்டி, அணைக்கரைப் பட்டி, டி.சேடபட்டி உள்பட 18 கிராமங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சூரி செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் கழக சார்பு அணி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம்,பனையூர், மேட்டுப்பனையூர், ஊர்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நமது வெல்லும் வேட்பாளர்,ஜீ .வி.மார்கண்டேயன் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் சின்ன மாரிமுத்து, அன்புராஜன், தேமுதிக ஒன்றிய செயலாளர் தங்கச்சாமி, தேர்தல் பொறுப்பாளர்கள் முருகேசன், வேல்முருகன், மாதவடியான், சன்னாசி, ஆரோக்கியராஜ் அந்தோணிராஜ், ராஜபாக்கியம், பால்பாண்டி, செல்வின் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.